DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 121 /2024**

Deposition of Witness: DW2.

| | | | |
|---|---|---|---|
| Name | வனராஜ் | Father Name – | வீரத்தேவர் |
| Age | 66 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.07.2026.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**.

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் சொல்லி தயார் செய்தது. மகாலிங்கம் சுப்பிரமணிக்கு எழுதிக்கொடுத்தது கிரைய ஒப்பந்தமா அல்லது ஈடு பத்திரமா என்றால் ஈடு பத்திரம். ஈடு பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. மேற்படி ஈடு பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. ஈடு பத்திரத்தில் உள்ள சொத்தின் சர்வே எண், நான்குமால் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் தந்தை மகாலிங்கத்திடம் ரூ.1,30,000 த்தை கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார் மூலமாக யார் அந்த தொகையை மகாலிங்கத்திடம் கேட்டது என்றால் சுப்பிரமணியன் தான் கேட்டார். ரூ.1,30,000 மகாலிங்கம் கொடுக்க வேண்டும் என்று யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் மகாலிங்கம் மற்றும் சுப்பிரமணி ஆகிய இருவரும் என்னிடம் சொன்னார்கள்.

2. ஈடு கடன் பத்திரத்தில் ரூ.11,500 மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். மீதமுள்ள தொகை ரூ.1,18,500 க்கு தனியாக எதுவும் ஆவணம் எழுதி வாங்கியுள்ளார்களா என்றால் எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை. நான்

இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.25/2023ல் எனக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி சுப்பிரமணி இன்று வந்துள்ளார் என்றால் இன்று வந்துள்ளாரா என்று எனக்கு தெரியாது, ஆனால் 1ம் பிரதிவாதி சுப்பிரமணி எனக்கு ஆதரவாக அந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார்.

3. நான் எந்த தெருவில் வசித்து வருகிறேன் என்றால் கரட்டுப்பட்டி ரோட்டில் வசித்து வருகிறேன். வாதிகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் குலாளர் பாளையத்தில் வசித்து வருகிறார்கள். நான் வேறு தெருவிலும், வாதிகள் வேறு தெருவிலும் வசித்து வருகிறார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்குரை சொத்தை தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் 1ம் பிரதிவாதியிடம் பிரதிபலன் பெற்றுவிட்டு அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அ ளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கின் விபரங்கள் தெரியாது என்றும், சுப்பிரமணி எனக்கு ஆதரவாக நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சாட்சியம் அளித்துள்ளதால் அவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.07.29 15:05:25 +0530

District Munsif,
Bodinayakanur.